திரு. லா. சந்தானம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 5—ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.806,10,42,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.48,30,45,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 01—4—2005 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1—33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

88. 2003—2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

2005 மார்ச் 31]

89. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

165. மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

166. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

167. வேளாண்மைத் துறை பற்றிய "மக்கள் சாசனம்". (தமிழ், ஆங்கிலம்)

168. புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் மேலாண்மை தொழில் நுட்பங்கள், 2004 என்னும் சிறுநூல். (தமிழ், ஆங்கிலம்)

169. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (2003–2005)

170. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் பட்டியல் (பதின்மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS